மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உண்மையல்ல. கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ஹையர் கிரேடு உடற்பயிற்சி ஆசிரியர் களுக்கு மற்ற இலாகாவில் கொடுக்கப்படும் சம்பள விகிதப்படி கொடுக்கும்படி அரசு ஆணை (பலவகை) எண். 681, சமூக நலம், நாள் 30—7—1973-ன் கீழ் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வைகைக் கால்வாய் சீரமைப்பு

*264 வினா—**திரு. த. சோணையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1973-74-ம் ஆண்டில், வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்ட வேலைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ?

(இ) இவ் வேலை எந்த ஆண்டு முடிவடையும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ரூ. 100 லட்சம்.

(இ) இவ் வேலை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மத்திய காலத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. த. சோணையா : இத் திட்டம் ஏறத்தாழ பத்து பதினைந்து ஆண்டுகளாகவே நீடித்துக் கொண்டேயிருக்கிறது. இராமநாத புரம் மாவட்ட மக்கள் இதை வேகமாக எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அரசு இதை உடனடியாக முடிப்பதற்கு இன்னும் தீவிர மாக முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திட்டத்தைத் தீவிரமாக ஆக்குவதற்குத்தான் 1973-74-ல் 100 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நடப்பாண்டில் அத் திட்டத் திற்காக ரூபாய் 6.85 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

வைகை ஆயக்கட்டின்கீழ் உள்ள கண்மாய்கள்

*265 வினா—**திரு. த. சோணையா :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மேலவெள்ளூர், மாங்குடி கண்மாய்கள் வைகை ஆயக் கட்டில் சேர்க்கப்பட்டிருந்தது இப்பொழுது விடுபட்டுள்ளதா ?